Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, FEBRUARY 23, 2024

வெள்ளிக்கிழமை பெப்ரவரி 23, 2024 | ஒளி: 09 கதிர்: 199 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ FREE



விழிப்புடன் தியானத்தில் அமர்ந்து துறவு பூண்டு
முழுஞானம் பெற்றவரை தேவரும் விரும்பு கிறார்கள்.
(தர்மபோதனை)

## கோப், கோபா குழுக்களின் தலைமைகளை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும்

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) மற்றும் அரசாங்கக் கணக்குக் குழு (கோபா) ஆகிய குழுக்களின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும். இது தொடர்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## “அரசியல்வாதிகள் அனைவரும் இறக்க வேண்டுமாம்”

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை போன்று அரசியல்வாதிகள் அனைவரும் இறக்க வேண்டும் என 3 பேரைக் கொண்ட கட்சியினர் கருதுகிறார்கள். எனவே இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம்



தொடர்ச்சி P2

## “தனியார் ஊடகங்களை புறக்கணித்தால் வெற்றியளிக்காது”

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்படும் செயலமர்வுகளுக்கு தனியார் ஊடகங்கள் அழைக்கப்படாமல் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத்திட்டம்.

தொடர்ச்சி P2

‘குப்பிலாம்பு’ விவகாரம்:

# “எதிராக நடவடிக்கை”

### பிரதமர் அதிரடி: பெருந்தோட்ட அபிவிருத்திக்கு அர்ப்பணிப்பு என்கிறார்

மலையக மக்களை அவமதிக்கும் வகையில் கீழ்த்தரமான முறையில் கருத்து தெரிவித்துள்ள மின்சார சபையின் ஊடக பேச்சாளரை பதவி நீக்கி அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் வலியுறுத்தினார்.

இந்நிலையில், இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தனது இராஜினாமா கடிதத்தை வியாழக்கிழமை (22) மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கையளித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) விசேட கூற்றை முன்வைத்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவிக்கையில்,

பதுளை பகுதியில் பெருந்தோட்டப் பகுதியில் உள்ள வீட்டில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்காகத் தந்தை ஒருவர் தனது பக்கத்து வீட்டாரின் அனுமதியுடன் அவர்களின் வீட்டிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிட்ட மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் ‘கல்வி கற்பதற்கு மின்சாரம் தேவையில்லை அவர்கள் குப்பி விளக்கில் கல்வி கற்கலாம்’ என்று கீழ்த்தரமான முறையில் கருத்து தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## 1143 வகை அழகுசாதன பொருட்கள் சிக்கின

மனித உடலுக்கு கடுமையாக தீங்கு விளைக்கக்கூடிய இராசயனம் அடங்கிய அழகுசாதன பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. ஊழல் ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த தகவல்களுக்கு அமைய புறக்கோட்டை இரண்டாம் குறுக்கு வீதியைச் சேர்ந்த நான்கு கடைகளின் உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர்.



தொடர்ச்சி P2



## “உலக தொழில் சந்தையில் வெற்றி பெற உகந்த சூழல்”

### ஜனதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

நவீன உலகிற்கு ஏற்றவாறு தொழில் கல்வியை மறுசீரமைத்து, இந்நாட்டின் இளைஞர் யுவதிகள் போட்டித் தன்மை நிறைந்த உலக தொழில் சந்தையில் வெற்றி பெறுவதற்குத் உகந்த சூழல் உருவாக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2



## கொக்குத்தொடுவாய் எச்சங்களின் காலங்கள் அறிவிப்பு

சண்முகம் தவசீலன்

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி மீட்கப்பட்ட எச்சங்கள் 1994ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குரியவை என ராஜ் சோமதேவவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாக சட்டத்தரணி வி.கே.நிறஞ்சன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கால்கோள் விழா...

2024ஆம் ஆண்டுக்கான முதலாம் தரத்துக்கு புதிய மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வு, நாடளாவிய ரீதியில், வியாழக்கிழமை (22) நடைபெற்றது. அக்கரைப்பற்று-ஆயிஷா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் வித்தியாரம்ப விழா அதிபர் திருமதி நஜீமா ஹாறுத்தீன் தலைமையில், பாடசாலை அன்னை ஸாலிஹா மண்டபத்தில் நடைபெற்றது.

## காலி முகத்திடல் போராட்ட களம் சூதாட்டத்துக்கு வழங்கப்படாது

காலி முகத்திடல் போராட்ட களம் நிலப்பகுதியை கசினோ சூதாட்ட நடவடிக்கைகளுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஜே.வி.பி. எம்.பி. விஜித ஹேரத் கூறிய கருத்து அப்பட்டமான பொய். அதனை முழுமையாக நிராகரிக்கின்றேன் என அரச தரப்பு பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## பணவீக்க அதிகரிப்பால் விலைகள் அதிரிப்பு

ஜனவரி மாதத்தில் பணவீக்கம் 6.5 சதவீதமாக அதிகரித்து ஒரு கிலோ கிராம் சோளம், உளுந்து, பயறு மற்றும் கௌபி ஆகியவற்றின் விலை 300 ரூபாவால் அதிகரித்துள்ளது. இந்நிலையில் வயல் நிலங்களில் நெல் மோசடி இடம் பெற்று வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## தமிழக மீனவர்கள் 18 பேர் நிபந்தனையுடன் விடுதலை

ஒருவருக்கு 6 மாத சிறைத்தண்டனை

எல்லை தாண்டி மீன் பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இம்மாதம் 8ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 18 பேரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## புதிய கடற்றொழில் வரைபு ஒரு மாதத்தில் வரும்

இலங்கை கடற்றொழில் சமூகத்தை சர்வதேச மட்டத்தில் உயர்த்துவதற்காக FAO அமைப்பின் உதவியுடன் உருவாக்கப்பட்டு வரும் தற்போது வரைபு மட்டத்திலுள்ள புதிய கடற்றொழில் சட்டத்தை ஒரு மாதத்திற்குள் கடற்றொழிலாளர்கள் மற்றும் துறைசார் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி அமைச்சரவையின் அனுமதியுடன், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும்

பாராளுமன்றம் வியாழக்கிழமை (22) காலை 9.30 மணிக்கு பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் கூடியது. இதன்போது சபாநாயகரின் அறிவிப்பில் புதிய பாராளுமன்றத்தின் பாராளுமன்ற குழுக்களில் சேவை செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களைச் சபைக்கு அறிவித்தார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., புதிய பாராளுமன்றத்தின் கோப், கோபா மற்றும் பொது கணக்குகள் பற்றிய குழு ஆகியவற்றின் தலைமை பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க வேண்டும்.

நாட்டில் போராட்டம் இடம்பெற்ற காலப்பகுதியில் இந்த கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குவதாகச் சபாநாயகர் இந்த சபையில் வாக்குறுதி அளித்திருந்தார். அது எழுத்து மூலம் இருக்கிறது.

ஆனால், போராட்டம் முடிவடைந்ததுடன் அதனைச் சபாநாயகர் மறந்துவிட்டார்.

எனவே கோப், கோபா மற்றும் பொது கணக்குகள் பற்றிய குழுக்களுக்கான தலைமை பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு எதிர்க்கட்சி சார்பாகக் கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

அதற்குச் சபைக்குத் தலைமை தாங்கிய பிரதி சபாநாயகர், இந்த விடயத்தைச் சபாநாயகருக்கு அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## “அரசியல்வாதிகள் அனைவரும் இறக்க வேண்டுமாம்”

கொலையா அல்லது விபத்தா என்பதில் சந்தேகம் உள்ளதால் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சரும் அரச தரப்பு எம்.பியுமான ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) இடம்பெற்ற வாகன விபத்தில் பலியான இராஜாங்க அமைச்சர் சனத் நிசாந்தவுக்கான அனுதாப பிரேரணையில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மரணம் கொலையா அல்லது விபத்தா என்பதில் பாரிய சந்தேகம் உள்ளது. இதனால் தான் அவரது மனைவி குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளார். ஆகவே, குற்றப்புலனாய்வு திணைக்களம் இந்த முறைப்பாட்டைத் துரிதமாக விசாரணை செய்து உண்மையை நாட்டு மக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களையும் விமர்சிப்பது தற்போது புதிய கலாசாரமாக மாறியுள்ளது. 225 பேரில் மூன்று பேரைக் கொண்டவர்கள் 225 பேரையும் விமர்சிக்கிறார்கள். அரசியல் கலாசாரத்துக்கு எதிரான கருத்துக்களையும் கூறுகின்றார்கள்.

சனத் நிஷாந்த கௌரவமானவர், பண்பானர், மனிதாபிமான மிக்கவர். பாராளுமன்றத்தில் சிறந்த முறையில் செயற்பட்டவர். அவருக்கு எதிராக சமூக வலைத்தளங்களில் பொய்யான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால், அவரது இறப்புக்கு வருகை தந்த பெருந்திரளான மக்கள் அந்த குற்றச்சாட்டுக்களைப் பொய்யாக்கி விட்டார்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த உயிருடன் இருக்கும்போதும் சமூக வலைத்தளங்கள் அவரை கடுமையாக விமர்சித்தன. அவர் உயிரிழந்த பின்னரும் கடுமையாக விமர்சிக்கின்றன. அவரை கழுதை என்று விமர்சித்ததுடன் புத்தளம் மாவட்ட மக்களையும் கழுதைகள் என்று விமர்சிக்கும் மனநிலையில் தான் ஊடகங்கள் இருந்தன.

இராஜாங்க சனத் நிஷாந்தவை போன்று பெரும்பாலான அரசியல்வாதிகள் இறக்க வேண்டும் என்று மூன்று பேரைக்கொண்ட அரசியல் தரப்பினர்கள் நினைக்கிறார்கள்.

பொய்யான கருத்துக்களைக் குறிப்பிட்டு மக்களைத் தவறான வழிநடத்துகிறார்கள் என்றார்.

## “தனியார் ஊடகங்களை...

வெற்றியளிக்கப் போவதில்லை என எதிர்க்கட்சி பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) ஊடக அமைச்சு ஆலோசனை குழு அறிக்கையைச் சபைக்குச் சமர்ப்பித்து உரையாற்றிக்கொண்டிருந்த ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தனவிடம் இடையீட்டுக் கேள்வியொன்றை எழுப்பியே இவ்வாறு தெரிவித்தார். அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிக்கையில்,

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் அனுசரணையில் ஊடகவியலாளர்களுக்குச் செயலமர்வுகளை நடத்திவருகிறோம். அதில் துறைசார் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு செயலமர்வுகளை நடத்தி வருகின்றனர். யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற செயலமர்வில், தமிழ் உரைபெயர்ப்பும் வழங்கப்பட்டிருந்தது. எதிர்காலத்திலும் ஊடகவியலாளர்களுக்கு இவ்வாறான செயலமர்வுகளை நடத்தி ஊடக நெறிமுறைகளை அறிவுறுத்த நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்றார்.

இதன்போது குறுக்கிட்ட எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி, நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடத்தப்படும் ஊடக செயலமர்வுகள் தொடர்பில் தெரிவித்திருந்தார். ஆனால், அந்த அறிக்கையைப் பார்க்கும்போது அந்த செயலமர்வுக்கு அழைக்கப்பட்டிருப்பது அரச ஊடகங்களை சேர்ந்தவர்களாவர். தனியார் ஊடகங்களுக்கு அழைப்பு இல்லை. ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினால் இதனைச் செய்வதாக இருந்தால், அரச, தனியார் இரண்டு ஊடகங்களையும் அழைத்துச் செய்திருக்க வேண்டும்.

இந்த செயலமர்வை யாழ்ப்பாணத்தில் நடத்தியதாக அமைச்சர் தெரிவித்திருந்தார். ஆனால், யாழ்ப்பாணத்தில் அதிகம் விற்பனையாகும் பத்திரிகை உதயன் பத்திரிகையாகும். அவர்களுக்கு இந்த செயலமர்வுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அதனால் இவ்வாறான செயலமர்வுகளுக்கு இரண்டு தரப்பினரையும் அழைத்திருக்க வேண்டும். அப்போதுதான் இந்த வேலைத்திட்டம் வெற்றியடையும் என்றார். அதற்கு அமைச்சர் பதிலளிக்கையில், செயலமர்வில் தனியார் ஊடகவியலாளர்களும் செயலமர்வில் கலந்துகொண்டிருந்தனர். எனது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த பெயர் பட்டியல் குறித்த செயலமர்வில் கலந்துகொண்டு அதனை முன்னெடுத்த விரிவுரையாளர்களாவர் . ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினாலே இவர்களுக்கான அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. மாறாக எமது எந்த தலையீடு இருக்கவில்லை என்றார்.

# “எதிராக நடவடிக்கை”

அதுமட்டுமன்றி, பெருந்தோட்ட பகுதியில் உள்ள ஆண்கள் பகல் இரண்டு மணிக்கு பின்னர் மது போதையில் இருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான மிகவும் கீழ்த்தரமான கருத்தினை எவ்வாறு அவர் கூற முடியும்?

தனது பிள்ளைகளின் கல்விக்காக உயிரிழந்த தந்தையை அவமதித்து விட்டு மறுபுறம் ஒட்டுமொத்த பெருந்தோட்ட மக்களையும் மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் அவமதித்துள்ளார். பெருந்தோட்ட மக்களை அவமதிக்கும் வகையில் கீழ்த்தரமான கருத்துக்களை குறிப்பிட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன். ஆகவே இவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என்றார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, அந்த அதிகாரி குறிப்பிட்ட கருத்தின் உண்மைத் தன்மை தொடர்பில் ஆராய்ந்து அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளேன். பெருந்தோட்ட மக்களுக்கான அபிவிருத்தி பணிகளை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம் என்றார்.

இதனைத் தொடர்ந்து எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, பிரதமருக்கும், அரசாங்கத்துக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மின்சார சபையின் பேச்சாளரைப் பதவி நீக்கி,அவருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றார்.

இதேநேரம் இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த தனது இராஜிநாமா கடிதத்தை வியாழக்கிழமை (22) காலை மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவிடம் கையளித்து, தான் குறிப்பிட்ட கருத்து பெருந்தோட்ட மக்களை அவமதிப்பதாக அமைந்தால் அதற்கு மன்னிப்பு கோருவதாகவும் தெரிவித்துள்ளார்.

## தமிழக மீனவர்கள் 18 பேர் நிபந்தனையுடன் விடுதலை

மீனவர்கள் பயணித்த படகொன்று அரசுடைமை ஆக்கப்பட்டுள்ளதுடன், படகோட்டி ஒருவருக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில் இரண்டு படகுகளுடன் எல்லை தாண்டி மீன்பிடித்துக்கொண்டிருந்த போது தமிழக மீனவர்கள் 19 பேரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்ட தமிழக மீனவர்களை யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகள் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தினர்.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதவான் ஜே. கஜநிதிபாலன் முன்னிலையில் வியாழக்கிழமை (22) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தமிழக மீனவர்கள் 19 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

ஒரு படகின் உரிமையாளர் குற்றம் இடம்பெற்றபோது, படகில் இருந்தமையால், அந்த படகை அரசுடைமையாக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

மற்றைய படகின் படகோட்டி GPS கருவியை பாவித்தும் எல்லை தாண்டியமையால், அவருக்கு 6 மாதங்கள் சிறைத்தண்டணை விதித்து நீதவான் உத்தரவு பிறப்பித்தார்.

ஏனைய 18 மீனவர்களும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத சிறைத்தண்டனை என்ற அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டனர்.

# புதிய கடற்றொழில் வரைபு ஒரு மாதத்தில் வரும்

ஐ.நா. உலக உணவு மற்றும் விவசாய அமைப்பின் (FAO) பிரதி பணிப்பாளர் நாயகம் மனுவேல் பராங்கே தலைமையிலான பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்று கடற்றொழில் அமைச்சில் புதன்கிழமை (21) இடம்பெற்றது. இதன்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சட்டத்தைத் தயாரிப்பதற்கு FAO தரப்பில் வழங்கப்பட்ட உதவிகளுக்குத் தனது நன்றியைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை கடற்றொழில்துறையை அபிவிருத்தி செய்வதற்கும் எமது அறுவடைக்குப் பின்னரான பதிப்புகளைத் தடுப்பதற்கும் எது நாட்டின் உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் FAO அமைப்பின் உதவி மற்றும் ஆலோசனை தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டிய அமைச்சர் குறிப்பாக எதிர்காலத்தில் மீன்வளம் அழிவடையும் அபாயம் இருப்பதால் கூடுகளில் மீன்களை வளர்ப்பதற்கான உதவிகளைச் செய்து தருமாறும் இது உலகெங்கும் நடைமுறையில் உள்ள விடயம் என்பதால் மோதா போன்ற மீன் இனங்களை வளர்ப்பதற்கு உதவி பரியுமாறும் FAO பிரதிநிதிகளிடம் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை மீனவர்களுக்கு கடும் பாதிப்புகள் ஏற்படுவதாகவும் தெரிவித்த அமைச்சர் தற்போது எமது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார பிரச்சினைகளில் இருந்து மீட்சிபெறும் வரை கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் நிவாரணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

## பணவீக்க அதிகரிப்பால் விலைகள் அதிரிப்பு

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) விசேட கூற்றை முன்வத்தே இதனைத்தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், ஒரு கிலோ கிராம் நெல்லுக்கு 130 ரூபாய் உத்தரவாத விலை வழங்கப்பட்டிருந்த போதிலும் அவர்கள் 90-100 ரூபாவுக்கே விற்பனை செய்கின்றனர். அவ்வாறு நடக்கும் போது நுகர்வோருக்கு அதிக விலையில் விற்பனை செய்யப்படுகிறது. நாட்டில் விவசாயத்தில் இடைநடுவே உள்ள இடைத்தரகர் மாபியாவினால் விவசாயத்தில் மோசடிகள் நடந்து பாரிய இலாபம் ஈட்டும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இதனால் விவசாயிக்கும் நுகர்வோருக்கும் இலாபம் கிட்டுவதில்லை. எனவே, விவசாய நிலங்களில் விளையும் நெல்லுக்கு நிர்ணய விலையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

நுகர்வோரின் உரிமைகளை மீறி நுகர்வோருக்கு அதிக விலையில் நெல் விற்பனை செய்யும் நடவடிக்கைக்கு எதிராக வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க வேண்டும்.

இதற்காக நியாயமான விலைசூத்திரத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்றார்.

# 1143 வகை அழகுசாதன பொருட்கள் சிக்கின்

அவர்களிடமிருந்து 1,143 வகையான கிறீம்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைப்பற்றப்பட்ட அழகுசாதனப் பொருட்கள் உலக சுகாதார அமைப்பின் அளவுகோல்களுக்கு அமைவாக இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கடைகளின் உரிமையாளர்கள் கலகெடிஹேன, மொரட்டுவ மற்றும் வத்தளை பிரதேசங்களில் வசிப்பவர்கள் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# “உலக தொழில் சந்தையில் வெற்றி பெற உகந்த சூழல்”

அதற்கமைய நாட்டின் அனைத்து தொழில் பயிற்சி நிறுவனங்களையும் ஒருங்கிணைத்து ஒரே பல்கலைக்கழக கட்டமைப்பின் கீழ் கொண்டு வருவதோடு, புதிய விடயப் பரப்புக்களை உள்ளடக்கிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இரத்மலானை லலித் அத்துலத்முதலி தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வியாழக்கிழமை (22) மேற்பார்வை விஜயமொன்றை மேற்கொண்டிருந்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

லலித் அத்துலத்முதலியின் நினைவாக இந்நாட்டுப் பிள்ளைகளின் நல்வாழ்வைக் கருத்தில் கொண்டு நிறுவப்பட்ட இந்த நிறுவனம் தற்போது தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கீழ் இயங்கி வருவதுடன் மோட்டார் இயந்திரவியல், தகவல் தொழில்நுட்பம், முப்பரிமாண வடிவமைப்பு 3D,பாலர் பாடசாலை ஆசிரியர் பாடநெறி, நவீனத் தொழில்நுட்பப் பாடநெறி, அழகுக்கலை நிபுணர் பாடநெறி, மொழிப் பாடநெறிகள் உட்பட நவீன உலகிற்குத் தேவையான பல்வேறு பாடநெறிகள் இங்கு நடத்தப்படுகின்றன.

பாடநெறிகள் நடத்தப்படும் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவர்களின் நலன்புரி மற்றும் பிற நலன் தொடர்பிலான விடயங்கள் குறித்து ஜனாதிபதி மாணவர்களுடன் சிநேகபூர்வமாகக் கலந்துரையாடியதோடு, மாணவர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்தார்.

நவீனத் தொழில்நுட்பத்தின் வாயிலாக இலங்கையின் இளைஞர் யுவதிகள் முன்னோக்கிச் செல்ல காணப்படும் வாய்ப்புகள் குறித்து இளைஞர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, தற்போது டிஜிட்டல் மாற்றத்திற்கான முன்னெடுப்புக்கள் துரிதமாக இடம்பெற்று வருவதோடு, இதன்போது செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட துறைகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்படும் எனவும், நாளாந்தம் மாற்றமடையும் தொழில்நுட்பத்துடன் முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதே இலங்கையின் எதிர்பார்ப்பாகும் எனவும் தெரிவித்தார்.

முன்பள்ளி கற்கைநெறியை மேற்கொண்டு சொந்தமாக முன்பள்ளியொன்றை நடாத்த எதிர்பார்ப்பதாகவும் அதற்கு ஒழுங்கான முறைமையொன்றை உருவாக்கித் தருமாறும் முன்பள்ளி கற்கைநெறியை கற்கும் மாணவியொருவர் விடுத்த கோரிக்கைக்குப் பதிலளித்த ஜனாதிபதி, முன்பள்ளி கல்வியை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஆரம்பித்துள்ள திட்டத்துடன் இணைந்ததாக இந்தக் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்தப்படும் என்று தெரிவித்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே.மஹேஷன், தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவரும் பணிப்பாளருமான பசிந்து குணவர்தன, இளைஞர் மற்றும் நிலைபெறு அபிவிருத்தி தொடர்பான ஜனாதிபதியின் பணிப்பாளர் ரந்துல அபேவீர, லலித் அத்துலத்முதலி தொழில் பயிற்சி நிலையத்தில் ஆசிரியர்கள் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது இணைந்து கொண்டிருந்தனர்.

## கொக்குத்தொடுவாய் எச்சங்களின் காலங்கள் அறிவிப்பு

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி தொடர்பான குறித்த வழக்கானது முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் தலைமையில் வியாழக்கிழமை(22) விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணையின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சட்டத்தரணி வி.கே. நிறஞ்சன், ஏற்கெனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட எச்சங்களில் இருந்து எடுக்கப்பட்ட அனைத்து பிற பொருட்கள் தொடர்பான பேராசிரியர் ராஜ் சோமதேவவின் மன்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டதன் அடிப்படையில், அது தொடர்பில், முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் மன்றின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

பகுப்பாய்வின் அடிப்படையில் இது 1994ஆம் ஆண்டுக்கு முற்படாததும் 1996ஆம் ஆண்டுக்குப் பிற்படாததுமான காலப்பகுதியினை கொண்டிருக்கலாம் என பல பக்கங்களைக் கொண்ட அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இது ஓர் இடைக்கால அறிக்கையாகப் பார்க்கப்படுகின்றது.

எஞ்சிய எலும்புக்கூட்டுத் தொகுதியினை அகழ்ந்தெடுப்பதற்கான நடவடிக்கைகள் அநேகமாக மார்ச் மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இருப்பினும் அதற்கான நிதி, அமைச்சினால் வழங்கப்படும் பட்சத்தில் அகழ்வு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆகையால், மார்ச் மாதம் 4ஆம் திகதிக்கு குறித்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வைத்தியர்களின் அறிக்கையின் மனித எச்சங்களின் வயது, பால், இறப்பிற்கான காரணம் போன்றவை குறிப்பிடப்படவில்லை என்றார்.

## காலி முகத்திடல் போராட்ட களம் சூதாட்டத்துக்கு வழங்கப்படாது

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (22) விசேட கூற்றை முன்வைத்தே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், ஜே .வி.பி. எம்.பி. விஜித ஹேரத் கடந்த பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் நகர அபிவிருத்தி அதிகார சபை காலி முகத்திடலில் உள்ள நிலப்பகுதியை கசினோ சூதாட்ட நடவடிக்கைகளுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், விசும்பாயே கட்டிடத்தை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்குவதும் பிரச்சினைக்குரியது என்று குறிப்பிட்டிருந்தார். இந்த கருத்து முற்றிலும் பொய்.

வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவில் பெற்றுக்கொள்வதற்காக 2022.11.14ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காணிகளை நீண்டகால குத்தகை அடிப்படையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்க அனுமதி வழங்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான காலி முகத்திடலில் உள்ள நிலப்பரப்பு வெளிநாட்டு முதலீடுகளுக்கு வழங்கப்படவில்லை. கொழும்பு-03 பாலதக்ஷ மாவத்தையில் உள்ள 1 ஏக்கர் நிலப்பரப்பை அபிவிருத்தி செய்ய பாலி இன்வெஸ்ட்மென்ட் தனியார் நிறுவனம் முன்வந்துள்ளது. இதற்கமைய வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிகார சபைக்குச் சொந்தமான காணியை நேரடியாக வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகளுக்கு அமைய 2024.02.16ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆகவே, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான காணிகள் முறையற்ற வகையில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படுவதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை முழுமையாக நிராகரிக்கிறேன் என்றார்.

# இலவச மீன் வழங்குவதில் குழப்பம்

■ டி.சந்ரு

நுவரெலியா மாவட்ட அரசாங்க அதிபரின் கீழ் இயங்கும் பிரதேசங்களில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சில குடும்பங்களுக்கு இலவசமாக மீன் வழங்கப்பட்டு விற்பனை செய்வதற்கு தேவையான பொருட்களும் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை வியாழக்கிழமை (22) இடம்பெற்றது.

இதன் போது ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் சில குடும்பங்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கை அனைத்து பகுதிகளிலும் சுமூகமான முறையில் இடம் பெற்றது.

இதில் கிரிமிட்டி 476/A கிராம சேவகர் பிரிவில் மாத்திரம், சமுர்த்தி உத்தியோகத்தரின் உறவினர் ஒருவரை அழைத்து சென்றமையால்அப்பிரதேசத்தில் வாழும் ஏனைய பொதுமக்கள் குழப்பமான நிலையில் உள்ளனர். குறிப்பாக சமுர்த்தி உதவித்தொகை வழங்குவதிலும் இவர் தமக்கு தேவையானவர்களை மாத்திரம் தன்னுடன் இணைத்துக் கொள்வதாகவும் ஏனையோரை புறந்தள்ளி வைப்பதாகவும் இப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இப்பகுதிக்கு பொறுப்பான அதிகாரிகள் தலையிட்டு இவ்வாறான செயற்பாடுகளை நீக்கி அனைவருக்கும் சம உரிமை கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டுமென கோரிக்கையை முன்வைக்கின்றனர்.

# உள்ளக விளையாட்டரங்கு திறந்து வைப்பு

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்




மட்டக்களப்பு - காத்தான்குடி கல்விக் கோட்டத்திலுள்ள காத்தான்குடி- ஹிழுறியா வித்தியாலயத்திற்கு ஒரு கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஹிழுறியா வித்தியாலய உள்ளக விளையாட்டரங்கு வியாழக்கிழமை(22) கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஃபோரம்ஸ் நிறுவனத்தின் நிதியுடன் இந்த உள்ளக விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ளத்துடன் நினைவுக்குக் கல்லும் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

ஹிழுறியா வித்தியாலய அதிபர் யஸீர் அரபாத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் காத்தான்குடி நகரசபை முன்னாள் தவிசாளர்களான எஸ். எச்.அஸ்பர் மற்றும் மர்சூக் அகமது லெவ்வை காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன தலைவர் ரவூப் ஏ.மஜீத் உட்பட கல்வி அதிகாரிகள் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சாரதியின் அவசரத்தால் பெண் மரணம்; வழித்தட அனுமதி இரத்து

■ எம்.றொசாந்த்



யாழ்ப்பாணம் - அனலைதீவு பகுதியில் பேருந்திலிருந்து பெண்ணொருவர் இறங்க முற்பட்டபோது, சாரதி அவசரமாகப் பேருந்தை நகர்த்தியமையால், அப்பெண் விழுந்து படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த சம்பவம் கடந்த திங்கட்கிழமை (19) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஊர்காவற்துறை பொலிஸார் பேருந்தின் சாரதியை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய போது, நீதிமன்ற உத்தரவின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், வடமாகாண போக்குவரத்து அதிகார சபையினரால் குறித்த பேருந்தின் வழித்தட அனுமதியை இரத்து செய்துள்ளதுடன், பேருந்துகள் போட்டிப் போட்டு ஓடுவதனாலேயே அதிகளவான விபத்துகள் இடம்பெற்று வருவதாகவும், அவ்வாறு அதிவேகமாகப் பேருந்துகளைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பில், யாழ். மாவட்ட செயலக வளாகத்திலுள்ள வடமாகாண போக்குவரத்து அதிகார சபையினருக்கு முறையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஸ்கூட்டிக்கு தீ வைத்த இருவர் கைது

■ ஏ.எம்.கீத்

திருகோணமலை- உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அன்பு வெளி பிரதேசத்தில் ஸ்கூட்டர் ஒன்று மீது தீ வைத்த சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

திருகோணமலை - துவரங்காடு, வருவோதய நகர் பிரதேசத்தை சேர்ந்த 22 மற்றும் 36 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

குறித்த இருவர் மது போதையில் இருந்த நிலையில் முச்சக்கர வண்டியில் பயணித்துள்ளதுடன் முச்சக்கரவண்டி சாரதியை தாக்கி கப்பம் கேட்டு அச்சுறுத்தியுள்ளனர் .

இந்நிலையில், முச்சக்கரவண்டி சாரதி தனது சகோதரனுக்கு அழைப்பு எடுத்து, அவர் அங்கு வந்து நியாயம் கேட்ட சந்தர்ப்பத்தில் மதுபோதையில் இருந்த இருவர் அவரையும் தாக்கி ஸ்கூட்டர் வண்டிக்கு தீவைத்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த நபர்களை கைது செய்யப்பட்டதாகவும் அவர்களை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்த நடவடிக்கையில் எடுத்துள்ளதாகவும் உப்புவெளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜீவன் கண்டனம்



அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட சமூக செயற்பாட்டாளர்களிடமிருந்து எழுந்த கடும் எதிர்ப்பையடுத்து இலங்கை மின்சார சபையின் ஊடகப்பேச்சாளர் அப்பதவியில் இருந்து விலகியுள்ளார்.

மின்சார சபையின் ஊடக பேச்சாளரின் கருத்தை அமைச்சர் ஜீவன் தொண்டமான், வன்மையாகக் கண்டித்ததுடன், அது ஏற்றுக்கொள்ள முடியாதது என ஜீவன் தொண்டமான் தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டிருந்தார்.

# பிரதேச சபை செயலாளராக ராசஜோகினி நியமனம்

■ சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினை சேர்ந்த ஜெயக்குமார் ராசஜோகினி பிரதேச சபை செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2023ஆம் ஆண்டுக்கான வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட முகாமைத்துவ சேவை பதவியுர்வு பரீட்சை (Supra Exam) பெறுபேறுகள் அடிப்படையில் மாகாண ரீதியில் முல்லைத்தீவு மாவட்டத்தின் திணைக்களங்களில் இருந்து தோற்றிய அதிகாரிகளில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினை சேர்ந்த ஜெயக்குமார் ராசஜோகினி 6ஆவது இடத்தைப் பெற்றிருந்தார்.

இந்நிலையில், பதவி உயர்வு பெற்று கரைதுறைப்பற்று பிரதேச சபை செயலாளராக நியமிக்கப்பட்டு செவ்வாய்க்கிழமை (20) நியமனக் கடிதத்தைப்பெற்று புதன்கிழமை (21) கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளார்.

# சிறுமி பாலியல் துஷ்பிரயோகம்: சிக்கினார் பெரியப்பா

மொனராகலை- மெதகம பொலிஸ் பிரிவில் ரத்தனதெனிய ஹொகொல்ல பிரதேசத்தில் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், அவருடைய பெரியப்பாவான 'சமந்த' என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

11 வயதும் 10 மாதங்களுமேயான இச்சிறுமி, 2019 ஆம் ஆண்டில் இருந்து பெரியப்பாவினால், அச்சிறுமியின் வீட்டில் வைத்தே, இரண்டு வருடங்களாக அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அச்சிறுமியின் வீட்டில் ஒருவர் திருடுவதற்கு மறைந்துள்ளார் என்பது தொடர்பில் பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வந்த அயலவர்கள், அவரை பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 15 வயதான சிறுமியுடன் காதல் உறவை கொண்டிருப்பதால் அந்த வீட்டுக்குச் சென்றதாகவும், அச்சிறுமியை எவ்விதமான தொந்தரவுக்கும் உட்படுத்தவில்லையென பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

எனினும், சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அச்சிறுமி, அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் சிறுமியிடம் மேற்கொண்ட விசாரணையின், தன்னுடைய பெரியப்பா, அவ்வப்போது பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார். எனினும், வெளியில் சொன்னால், இரு வீட்டாருக்கும் இடையில், பிரச்சினை ஏற்படும் என்ற பயத்தால், வெளியில் சொல்லவில்லை என்றார்.

சந்தேகநபரை பிபில நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்த மெதகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## யாழ். விமான நிலையத்திற்கு காணி சுவீகரிப்பு:

# ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிவுறுத்தல்

■ நிதர்ஷன்

யாழ். சர்வதேச விமான நிலையத்துக்கென விடுவிக்கப்பட்ட காணிகளில் மீள அளவீடு செய்வது தொடர்பாக பணிகளின் அறிக்கைகளை எதிர்வரும் மார்ச் 5ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானச் சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலைய விஸ்தரிப்புக்கென மக்கள் மீளக் குடியேறியுள்ள வலி வடக்கு பிரதேசத்தின் குரும்பசிட்டி J/242, கட்டுவன் J/238, கட்டுவன் மேற்கு J/239, குப்பிளான் வடக்கு J/211, மயிலிட்டி தெற்கு J/240 கிராமங்களில் காணி அளவீடுகள் இடம்பெறுவதாக மக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அது தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் எழுத்துமூலம் தெரியப்படுத்தியிருந்தார். இதனையடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

காணி சுவீகரிப்பு விடயம் தொடர்பில் கடந்த 16ஆம் திகதி அன்று நடைபெற்ற யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திலும் அங்கஜன் இராமநாதனால் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞனை தாக்கி மோட்டார் சைக்கிள் கொள்ளை

■ எம்.றொசாந்த்

வீதியில் பயணித்த இளைஞனை தாக்கி, அவரது மோட்டார் சைக்கிளை கும்பல் ஒன்று கொள்ளையடித்து சென்றுள்ளது.

யாழ். நகர் பகுதியில் இருந்து நாவற்குழி நோக்கி, யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையில் "வேகோ" ரக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவரை அரியாலை பகுதியில் வழிமறித்த கும்பல் ஒன்று சரமாரியாக தாக்கியுள்ளது.

தாக்குதலிருந்து தப்ப மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டு இளைஞன் ஓடியுள்ளதுடன், இதன்போது , குறித்த கும்பல் இளைஞனின் மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளது .

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# "ஜீவனின் வளர்ச்சியால் அரசியல்வாதிகள் புலம்பல்"



ஓர் இளம் அரசியல் தலைவராக மக்களின் கோரிக்கைகளை அமைச்சர் ஜீவன் தொண்டமான் நிறைவேற்றி வருவதால், அரசியலில் தாம் காணாமல் போய்விடுவோம் என்ற பீதியிலேயே அவர் மீது சில எதிரணி மலையக அரசியல்வாதிகள் விமர்சனக் கதைகளைத்தொடுக்க ஆரம்பித்துள்ளனர். இதுகாழ்ப்புணர்ச்சி, வங்குரோத்து அரசியலின் வெளிப்பாடு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்துள்ளனர்.

மேலும், வீட்டுரிமையையும், காணி உரிமையையும் வைத்து இதுவரை அரசியல் நடத்திவந்தவர்கள், இவ்விரண்டு உரிமைகளையும் அமைச்சர் ஜீவன் பெற்றுக்கொடுத்து விட்டால், தாம் அரசியலில் அநாதையாகி விடுவோம் என்ற அச்சம் அவர்களை ஆட்கொள்ள தொடங்கியுள்ளது. அதனால் தான்புலம்ப ஆரம்பித்துள்ளனர். கடந்த ஆட்சியின்போதே கட்சி பார்த்து வீடுகள் வழங்கப்பட்டன. இதன்போது புறக்கணிக்கப்பட்ட பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நாம் முன்னுரிமை வழங்கியுள்ளோம் என்றார்.

# ஆண்ணொருவரின் சடலம் மீட்பு

■ வ.சக்தி



மட்டக்களப்பு- களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு குடியிருப்பு கிராமத்தின் வீதியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் புதன்கிழமை(21) மாலை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேற்றாத்தீவு - குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த 84 வயதுடைய ஆறுமுகம் கிருஸ்ணபிள்ளை என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த கிராமத்தின் தாழ் நிலத்தை அண்டியுள்ள வீதியில் சடலம் ஒன்று கிடப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமையவே களுவாஞ்சிகுடி பொலிஸார் ஸ்த்தலத்திற்கு விரைந்து சடலத்தை மீட்கப்பட்டுள்ளனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘ஊர் இரண்டு பட்டால், கூத்தாடிக்குக் கொண்டாட்டம்’

பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கை முறைமை தொடர்பில் மிகவும் கீழ்த்தரமான கருத்துகளை முன்வைத்த, இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர், கடுமையான அழுத்தங்களின் பின்னர் பதவியை இராஜினாமா செய்துள்ளார். அவரை மீண்டும் இணைத்துக்கொள்வது விசாரணைகளின் அடிப்படையில் எடுக்கப்படும் தீர்மானமாகும்.

ஆனால், மற்றுமோர் அமைச்சின் கீழ், அதே பதவிக்கு இன்றேல் மற்றுமொரு பதவிநிலைக்கு அவர் நியமிக்கப்படமாட்டார் என்பதற்கு எவ்விதமான உத்தரவாதமும் இல்லை. ஏனெனில், பகிரங்க மன்னிப்பு கேட்டுவிட்டார் என பலரும் விளக்கமளிக்கலாம். கடந்தகாலங்களில் இவ்வாறு நடைபெறாமல் இல்லை.

பதுளை பகுதியில் பெருந்தோட்டப் பகுதியில் உள்ள வீட்டில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து தனது பிள்ளைகளின் கற்றல் நடவடிக்கைகளுக்காகத் தந்தை ஒருவர் தனது பக்கத்து வீட்டாரின் அனுமதியுடன் அவரின் வீட்டில் இருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சித்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இது ஒரு சம்பவமாகும்.

எனினும், ஊடகமொன்றின் நேர்காணலின்போது, கருத்துரைத்த இலங்கை மின்சார சபையின் ஊடகப் பேச்சாளர் நோயல் பிரியந்த ‘கல்வி கற்பதற்கு மின்சாரம் தேவையில்லை அவர்கள் குப்பி விளக்கில் கல்வி கற்கலாம்’ அதுமட்டுமன்றி, பெருந்தோட்ட பகுதியில் உள்ள ஆண்கள் பகல் இரண்டு மணிக்கு பின்னர் மது போதையில் இருக்கிறார்கள் என கீழ்த்தரமான கருத்தினை முன்வைத்திருந்தார்.

நமது நாட்டில் அதிகமாக மதுபானம் பருகும் மாவட்டங்களில் பெருந்தோட்ட மக்கள் பெரும்பான்மையாக வாழவில்லை. இவ்வாறான நிலையில்தான், அம்மக்கள் தொடர்பில் கீழ்த்தரமான கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு, மலையக அரசியல் தலைமைகள் பொறுப்பு கூறவேண்டும்.

ஏனெனில், தங்களுடைய மக்களின் உண்மையான வாழ்க்கை முறைமை தொடர்பில், ஏனைய மொழி பேசுவோருக்குப் புரியும்படி தெளிவுபடுதல் இல்லை. வெறுமனே, ஒருவரையொருவர் தூற்றிக்கொள்ளும் கருத்து மோதல்களே இடம்பெறுகின்றன.

பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வைக் காண்பதை விடவும், ஊதிப் பெருப்பித்து, பிரச்சினையில் குளிர்காய நினைப்போரில், ஒருசில அரசியல்வாதிகளின் வகிபாகம் மிகமிக முக்கியமானதாய் இருக்கிறது.

ஒரு சிறு தணலைக் கனலாக்கும் அளவுக்கு, தலைகீழாகச் சிந்திக்கும் திறமை, அந்த ஒருசிலருக்கே உண்டு.

இங்குதான், வாக்களித்தவர்களும் மக்களும் சமூகங்களும் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். இல்லையேல், தணலாகக் கனன்று கொண்டிருக்கும் பிரிவினைக்குள் நுழைந்து, குளிர்காய்ந்துவிட்டுச் சென்றுகொண்டே இருப்பர். ஒரு பேசும் பொருளை விட்டுச்சென்றுவிடுவர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அம்மக்களின் பிரச்சினைகளைக் கண்டறிந்து, உயரிய சபை உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் கவனத்துக்குக் கொண்டுவந்து தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு வழிசமைக்கவேண்டும். ஆனால், அரசியல், தொழிற்சங்க பேதங்களைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தால், கீழ்த்தரமான விமர்சனங்கள் தவிர்க்கமுடியாதவை ஆகையால், குடும்பிடிச் சண்டைகளைக் கைவிட்டு, சமூகத்துக்காக ஒன்றிணைந்து அவர்களின் பொதுப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு மலையக தலைமைகள் இனியாவது முன்வரவேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால், எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி -பருத்தியூர் பால. வயிரவநாதன்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் – 41:

# ஜே.வி.பி கிளர்ச்சி ஏற்படுத்திய தாக்கங்கள்

1971இல் ஜே.வி.பி ஆட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் நடத்திய கிளர்ச்சி தோல்வியில் முடிவடைந்தாலும், அது ஏற்படுத்திய தாக்கம் அடுத்த அரைநூற்றாண்டுகால இலங்கை அரசியலில் குறிப்பிடத்தக்க செல்வாக்கைச் செலுத்தியது. அதிலும் குறிப்பாக இலங்கையின் இனமுரண்பாட்டில் அதன் தாக்கம் அதிக கவனம் பெறுவதில்லை. இளைஞர் கிளர்ச்சி ஒன்று இலங்கையில் ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏன் உருவாகியது என்ற வினாவும் ஜே.வி.பியின் தோற்றத்தைப் புரிந்து கொள்வதும் முக்கியமானது.

ஜே.வி.பியை இன்றும் ஒரு மார்க்ஸிய லெனினிசக் கட்சி என்றே எல்லோரும் அழைக்கிறார்கள். ஜே.வி.பியும் அவ்வாறே தங்களை அழைத்துக்கொள்கிறது. ஆனால், அவர்களது நடைமுறையும் செயற்பாடுகளும் வரலாறும் அவர்களை ஒரு மார்க்ஸியக் கட்சியாகவன்றி ஒரு இனவாதக் கட்சியாகவே இனங்காட்டுகின்றன. ஜே.வி.பி. உருவானபோது அது தன்னை ஒரு இடதுசாரிக் கட்சியாகவே சிந்தித்தது என்பது உண்மை. ஏனெனில், அதன் தலைமையிருந்தோரின் அரசியல் தோற்றுவாய்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் இரண்டு பிரிவுகளிலும் இருந்தன. அதன் அதி முக்கியமான தலைவரான ரோஹண விஜேவீர மாக்ஸிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தனது மாக்ஸிய விரோத பேரினவாதச் செயற்பாடுகளுக்காக 1966இல் வெளியேற்றப்பட்டவர்.

விஜேவீரவின் பேரினவாதமும் இனத்துவேஷமும் இரகசியமானவையல்ல. குறிப்பாக மலையகத் தமிழர் தொடர்பில் பிரதான தேசியவாதக் கட்சிகளின் நிலைப்பாட்டை விட, அதிதீவிர விரோதப்போக்கு ஜே.வி.பியிடம் இருந்தது.

நாட்டில் நிலவிய பொருளாதார மந்தநிலையும் இளைஞர்களிற்கு வேலைவாய்ப்புகள் உருவாகாமல் போனமையும் ஜே.வி.பிக்கு வாய்ப்பானது. நாட்டின் பல இளைஞர்களைக் கவரக்கூடியவாறு ஜே.வி.பியின் பிரசாரமும் வேலைமுறையும் அமைந்தது. அக் கவர்ச்சியின் அடிப்படையில் ஜே.வி.பியின் உள்ளார்ந்த பேரினவாதமும் இந்திய விஸ்தரிப்புக் கொள்கையின் கரங்கள் என அது கருதிய மலையக மக்களை நாட்டைவிட்டே விரட்ட வேண்டும் என்ற கருத்தும் இருந்தன.

மே 1970இல் ஜே.வி.பி சிறிமாவோ பண்டாரநாயக்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தை ஆதரித்தது. முதலில் ஆதரித்து பின்னர் தாக்குவது ஒரு தந்திரோபாயமா அல்லது ஒரு வருடத்திற்குள் அவர்கள் உண்மையில் ஏமாற்றமடைந்தார்களா என்ற வினாவுக்கு இன்றுவரை பதிலில்லை.

அக்காலத்தில் ஐரோப்பாவில், குறிப்பாக பிரான்சில், ஏற்பட்ட இளைஞர் எழுச்சியும் இலத்தின் அமெரிக்காவெங்கும் புரட்சியை நடத்தலாம் என்ற சே குவேராசின் கருத்தும் சே குவேரா பற்றிய ஒரு கவர்ச்சிகரமான படிமமும் ஜே.வி.பியின் புரட்சி பற்றிய பார்வையைத் தீர்மானித்தன. ஜே.வி.பி தன்னை ‘சேகுவேரா குழு’ என்று தன்னை வர்ணித்தமை தற்செயலானதல்ல. விஜேவீர தனது கோட்பாடுகளை ரஷ்ய புரட்சிகர இலக்கியங்களிலிருந்து பெறவில்லை, மாறாக அவரது சமகாலத்தவர்களான சான்சிபாரின் காசிம் ஹங்கா போன்றோரின் போலி புரட்சிகர கோட்பாடுகளிலிருந்து பெற்றார். காசிம் ஹங்காவும் குழுவினரும் ஜனவரி 1964இல் சான்சிபாரில் ஒரு ‘ஒரு நாள் புரட்சியை’ வழிநடத்தினர், அது வெற்றிகரமாக இருந்தது, அதுவே விஜேவீர இலங்கையில் ஆரம்பத்தில் பின்பற்ற விரும்பிய மாதிரி.

ஜே.வி.பி இளைஞர் கோஷ்டியின் ஆயுதப் புரட்சி ஒன்றுக்குத் தயாரானது. அதில் இரண்டு பண்புகள் இருந்தன. முதலாவது, சாதிய வேறுபாடு காரணமான பிரிவுகள். இரண்டாவது. அவசர அதிதீவிர சாகசவாதத்தின் காரணமான பிரிவுகள். இரண்டாவது பிரிவினரில் ஒரு பகுதியான பிரிந்து சென்ற தர்மசேகர குழு, அமெரிக்கத் தூதரகத்திற்குக் குண்டெறிந்தது.

ஜே.வி.பியின் துரிதமான ஆட்சேர்ப்பும் ஆயுதத் தயாரிப்பும் பொலிஸூக்குத் தெரியாமலிருக்க வாய்ப்பில்லை என்ற வகையில் இரகசியப் பொலிஸாரும் ஜே.வி.பியில் இணைந்திருந்தனர். மறுபுறம் ஜே.வி.பியினர் கைக்குண்டுகளையும் வெடிபொருட்களையும் தயாரித்து வந்தமையைப் பற்றிப் பரவலான ஐயங்கள் இருந்த போதும், 1971 மார்ச் மாதம் குண்டுத் தயாரிப்பின் போது நடைபெற்ற ஒரு குண்டுவெடிப்பு இதை உறுதிப்படுத்தியிருந்தது.

1971 ஏப்ரல் 5ஆம் திகதி ஜே.வி.பி. அடுத்தடுத்துப் பல பொலிஸ் நிலையங்களைத் தாக்கிக் கைப்பற்றியது. பிரதமரை அவரது வீட்டிலிருந்து சிறையெடுத்துச்செல்ல எடுக்கப்பட்ட முயற்சி தோல்வி கண்டது. நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிலையங்களைப் பிடித்தும் பிரதமரைச் சிறையெடுத்தும் ஆட்சி மாற்றமொன்றைக் கொண்டுவரலாம் என்ற கோளாறான சிந்தனை தோல்வியில் முடிந்தது. இவ்வாறு ஒன்றுக்கு இலங்கையர்கள் தயாராக இருக்கவில்லை.

கிளர்ச்சி வேகமாகவே நசுக்கப்பட்டாலும் அதன் உடனடி விளைவுகளும் அதற்கான எதிர்வினைகளும் அதன் தொடர் விளைவுகளும் இலங்கை அரசியலிலும் அரசினது தன்மையிலும் அயல் உறவுகளிலும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தின. நாட்டில் இடம்பெற்ற முன்னைய தீவிர அல்லது வன்முறை அரசியல் நிகழ்வுகளுடன் ஒப்பிடும்போது, எழுச்சியும் அதன் அடக்குமுறையும் இரு தரப்பிலும் அசாதாரணமான மூர்க்கத்தனமாக இருந்ததுடன், வன்முறை அரசியல் சுழற்சிகளின் சங்கிலியை உருவாக்கியது. இந்த கிளர்ச்சியில் கொல்லப்பட்டோர் 15,000 அளவில் இருக்கலாம் என்பது ஏற்கப்பட்ட தொகையாகும்.

இவ்வாறு கொல்லப்பட்டோரின் மிகச் சிலரே நேரடி மோதலில் கொல்லப்பட்டனர். பெரும்பாலானோர் கைது செய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாகி இறந்தோராவார். இது குறித்துப் பேச பாராளுமன்றில் எவரும் தயாராக இருக்கவில்லை என்பது கவனிப்புக்குரியது. ‘அரச பயங்கரவாதத்திற்கு’ அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ‘மௌன அங்கீகாரம்’ வழங்கினார்கள். கதிர்காம அழகி என அறியப்பட்ட மன்னம்பெரி என்ற பெண் பாலியற் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதன் செய்திகள் வெளியானமை அரசுக்கு மிகப்பெரிய சங்கடத்தைக் கொடுத்தது. இதனால் பெயருக்கு ‘விசாரணை’ நடந்து சிலரே தண்டிக்கப்பட்டனர்.

அரசாங்கம் அவசரகால சட்டத்தை வைத்து ஜே.வி.பியுடன் தொடர்பில்லாத இடதுசாரித் தலைவர்களையும் கைது செய்தது. அதில் சண்முகதாசனும் வாசுதேவ நாணயக்காரவும் முக்கியமானவர்கள். வாசுதேவ நாணயக்கார பாராளுமன்ற உறுப்பினராக இருந்தபோதும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் வழக்கு எதையும் தொடராமல் ஒரு வருடத்திற்கும் மேலாகச் சிறை வைக்கப்பட்டார். அவரை விடுவிக்க ஆளும் கட்சிக் கூட்டணியில் இருந்த அவரது சமசமாஜக் கட்சியின் தலைவர்களுக்கு இயலவில்லை. அதேவேளை இக்கிளர்ச்சியைச் சாக்காக வைத்து அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி வடக்கில் அதுவரை சாதியத்திற்கெதிரான மக்கள் போராட்டத்தை வழிநடத்தி வந்த மாக்சிய லெனினியக் கம்யூனிஸ்ட் கட்சியினரும் குறிவைக்கப்பட்டனர். கிளர்ச்சியுடன் தொடர்பற்றோர் என நன்கறிந்தும் நேர்மையான இடதுசாரிகள் மீது பாய அரச இயந்திரம் கிளர்ச்சிக்குப் பின்பான சூழலைப் பயன்படுத்தியது.

இந்தக் கிளர்ச்சி ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் வன்முறை கலாசாரத்தை உருவாக்கியது, அது அன்றிலிருந்து நாட்டின் சாபமாக இருந்து வருகிறது. இது ஒரு பெரிய தீமையின் விளைவா அல்லது அடுத்தடுத்த நிகழ்வுகளுக்கான காரணமா என்பது விவாதத்திற்குரியது.

ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன்பு 2,000 பேரைச் கொண்டிருந்த பொலிஸ் படையின் எண்ணிக்கை விரைவிலேயே 15,000 ஆகியது. இராணுவமும் மேலும் வலிமைப்படுத்தப்பட்டது. எனினும் 1962 சதிப் புரட்சி பற்றிய அச்சங்கள் இருந்ததால் இராணுவத்தை மிகுதியாக வலுப்படுத்துவதில் ஊக்கம் காட்டப்படவில்லை. எவ்வாறாயினும் இராணுவத்தை உள்நாட்டுப் பிரச்சினைகளில் பயன்படுத்தும் போக்கு உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. இது நாட்டின் உள் அலுவல்களின் இராணுவத்தின் பங்குக்கு வழிகோலி அவர்களின் தவிர்க்கவியலாத பாத்திரத்தை உறுதி செய்தது.

1972இல் பல்கலைக்கழக அனுமதிகளைத் தரப்படுத்தியமை, மறுபுறம் தமிழ் இளைஞர்கள் தரப்பில் மனக்குறைகளை ஏற்படுத்திய கிளர்ச்சியின் சிதைந்த விளைவு எனக் கருதலாம். 1971 கிளர்ச்சி சிங்கள கிராமப்புற இளைஞர்களால் மட்டுமே நடந்தது என்பதை அறிந்த அரசாங்கம் யோசனையற்ற முறையில் தரப்படுத்தலை அறிமுகப்படுத்தி சிங்கள கிராமப்புற இளைஞர்களை அமைதிப்படுத்த முயன்று தோற்றது.

கிளர்ச்சி பற்றிய செய்தி வெளிவந்த உடனேயே இந்தியப் படைகள் உதவிக்கு வந்தன. இலங்கையில் சட்டவிரோத ஆட்சிக்கவிழ்ப்புகளை இந்தியா அனுமதிக்காது என்பதைக் கோடு காட்டியது. இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியாவின் இராணுவ உதவி வழங்கப்பட்டமையும் அமெரிக்காவும் மேற்குலகும் ஆதரவு தெரிவித்தமையும் முக்கியமானவை. சீனாவும் வட கொரியாவும் கிளர்ச்சியாளர்கட்கு ஆதரவு வழங்கின என்ற விதமான பொய்கள் பரப்பப்பட்டாலும் சீனா இலங்கை அரசாங்கத்துடனான தனது நட்பையும் ஜே.வி.பி. கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டதைத் தான் வரவேற்பதையும் அறிவித்தது.

எல்லாவற்றிலும் மேலாகக் கிளர்ச்சி தோல்வியடைந்தாலும், ஜே.வி.பி இளையோர் மத்தியில் விதைத்த இனத்துவேஷம் மனங்களில் ஆழ ஊறிய ஒன்றாக இருக்கிறது. இனமுரண்பாட்டுத் தீர்வு முனைப்புகளுக்கு ஜே.வி.பி தொடர்ந்து காட்டிவரும் எதிர்ப்பு இதற்கு முக்கிய காரணமாகும்.

## கடிதங்கள்

### பாலத்தை புனரமைத்து தாருங்கள்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள மூதூர் கட்டபறிச்சான் பாலமானது நீண்டகாலமாக சேதமடைந்து உடையக்கூடிய ஆபத்தான நிலையில் காணப்படுவதால் இதனை புனரமைத்துத்தருமாறும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பாலத்தினூடாகவே மூதூருக்கு சம்பூர் சேனையூர் கட்டபறிச்சான் கடற்கரைச்சேனை பள்ளிக்குடியிருப்பு நல்லூர் வீரமா நகர் பாட்டாளிபுரம் ஆகிய பகுதிகளிலுள்ள மக்கள் நாளாந்தம் பயணம் செய்துவருகின்றனர்.

இப்பாலம் யுத்தகாலத்தில் சேதமடைந்தாகவும் பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

இப்பாலத்தினூடாக பார ஊர்திகள் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடைசெய்யப்பட்ட பெயர்பலகை காட்சிப்படுத்தப்பட்டிருந்தும் கனரக வாகனங்கள் பார ஊர்திகள் செல்வதை காணமுடிவதாகவும் பொதுமக்கள் கூறுகின்றனர்.

சேதமடைந்து காணப்படும் இப்பாலத்தை பொதுமக்களின் நன்மை கருதி புனரமைத்துதருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- எஸ்.எல்.நௌபர்



உணவு மற்றும் வலுப் பாதுகாப்பை மேம்படுத்துவதில்

# ஜப்பான் பங்களிப்பு



புத்தளம் பிரதேசத்தைச் சேர்ந்த விவசாய அமைப்புகளுக்கு சூரிய வலுவில் இயங்கும் ஸ்பிரேயர்கள், நீர் பம்பிகள் மற்றும் குளிர வைக்கும் அறைகள் போன்ற புதுப்பிக்கத்தக்க வலுவில் இயங்கும் தொழில்நுட்பங்களை கையளிக்கும் நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகொஷி ஹிதேகி கலந்து கொண்டார். இந்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

“இலங்கையின் பின்தங்கிய சிறியளவிலான விவசாயிகளிடையே பரந்தளவு மேம்படுத்தலுக்காக பசுமைத் தொழில்நுட்பங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க வலு ஆகியவற்றை ஊக்குவிப்பதனூடாக உணவு மற்றும் வலுப் பாதுகாப்பை மேம்படுத்தல்” எனும் திட்டத்தினூடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்துக்கு ஜப்பானிய அரசாங்கம் நிதி உதவிகளை வழங்கியிருந்ததுடன் UNDP இனால் நடைமுறை ப்படுத்தப்பட்டிருந்தது.

வலுத் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்துள்ள விவசாயத் துறைக்கு இந்தத் திட்டம் உதவிகளை வழங்கும் என்பதுடன், புதுப்பிக்கத்தக்க வலுவை பயன்படுத்தி உணவு மற்றும் வலுப் பாதுகாப்பை மேம்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

சிறிய மற்றும் நடுத்தரளவு விவசாயிகளின் நிலைபேறான அபிவிருத்திக்கு இந்த உதவியினூடாக பயன் கிடைக்கும் என தாம் எதிர்பார்ப்பதாக தூதுவர் மிசுகொஷி தெரிவித்ததுடன், உலகளாவிய சூழலை கவனத்தில் கொண்டு, நிலைபேறான விவசாயத்தின் முக்கியத்துவத்தை விவசாயிகள் ஆழமாக புரிந்து கொள்ள உதவியாக அமைந்திருக்கும் எனவும் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

அதனூடாக இலங்கையில் புதுப்பிக்கத்தக்க வலு பயன்பாட்டை ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும். இலங்கையின் விருத்திக்கு அவசியமான ஆதரவைப்பெற்றுக் கொடுப்பதற்கான தமது அர்ப்பணிப்பை அவர் வெளிப்படுத்தியதுடன், இலங்கையுடன் ஜப்பான் நீண்ட காலமாக கொண்டிருக்கும் நட்பை மேலும் கட்டியெழுப்பவும் எதிர்பார்ப்பதாக குறிப்பிட்டார்.

Eco Hauler e–bike carts களுடன்

# Lumala புரட்சி



மூன்று தசாப்த காலத்துக்கு அதிகமான நிலைபேறான அர்ப்பணிப்புடன் இயங்கும் Lumala, இலங்கையின் சைக்கிள் துறையில் சூழலுக்கு நட்பான புத்தாக்கமான செயற்பாடுகளில் தொடர்ச்சியாக தனது பங்களிப்பை வழங்கி வருகின்றது.

நிறுவனத்தின் பரந்தளவு தயாரிப்புகளில் Lumala இன் அர்ப்பணிப்பு வெளிப்படுவதாக அமைந்திருப்பதுடன், சாகச அனுபவத்தை நாடுவோருக்கான மவுன்டன் சைக்கிள்கள் முதல் தினசரி நகர்களில் பயணிப்பதற்கு உகந்த சாதாரண சைக்கிள்கள் வரை தன்வசம் கொண்டுள்ளது.

இலங்கையர்கள் மத்தியில் சூழல்சார் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கும், செயற்திறனுடனான வாழ்க்கைமுறையை ஊக்குவிக்கவும் Lumala தன்னை அர்ப்பணித்துள்ளது.

புத்தாக்கமான செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும் Lumala , சர்வதேச நிலைபேறாண்மை எனும் பரந்த நிகழ்ச்சி நிரலுக்கு ஆதரவளிக்கும் சூழலுக்கு நட்பான தீர்வுகளை வடிவமைப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

இந்த அர்ப்பணிப்பானது, ஸ்மார்ட் போக்குவரத்து தீர்வுகளில் Lumala வின் தலைமைத்துவத்தை உறுதியாக வெளிப்படுத்தியுள்ளதுடன், சூழல் வழிநடத்தலில் எமது ஈடுபாட்டையும் உறுதி செய்துள்ளது.

புத்தாக்கம் மற்றும் சூழல் வழிநடத்துல்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டாக Eco Hauler இன் அறிமுகம் அமைந்துள்ளது.

இந்த புதிய Eco Hauler இனூடாக, இலங்கையில் சுமார் நாளாந்த பிளாஸ்ரிக் கழிவு உற்பத்தி சுமார் 938 மெட்ரிக் டொன்களாக காணப்படும் நிலையில், வெறும் 4 சதவீதம் மட்டுமே மீள்சுழற்சிக்குட்படுத்தப்படும் நிலையில், கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவசர பிரச்சனைகளுக்கு தீர்வு காண எதிர்பார்க்கப்படுகின்றது.

USAID Clean Cities, Blue Ocean (CCBO) நிகழ்ச்சித்திட்டத்துடன் கைகோர்த்து, Eco Hauler முன்னெடுப்பினூடாக கடல் பிளாஸ்ரிக் கழிவு மாசுக்கு எதிராக போராட எதிர்பார்க்கப்படுகின்றது. அதனூடாக காலநிலை மாற்றம் தொடர்பில் தீர்வு காண்பதற்கும், கழிவு சேகரிப்பை வினைத்திறனான முறையில் நகரங்களிலும் கரையோரப் பகுதிகளிலும், ஆற்றோரங்களிலும் முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சகாயத்தன்மை, குறைந்த செயற்பாட்டு செலவுகள், உயர் கொள்ளளவுத் திறன் மற்றும் சூழலுக்கு நட்பான வடிவமைப்பு போன்ற அம்சங்களைக் கொண்ட Eco Hauler இனால், நிலைபேறாண்மை தொடர்பில் Lumala காண்பிக்கும் ஒட்டுமொத்த செயற்பாடு பிரதிபலிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை முழுவதிலும் கழிவு முகாமைத்துவ செயன்முறையை மேம்படுத்துவதற்கும், Eco Hauler இன் தாக்கத்தை வெளிப்படுத்துவதற்காகவும், மாநகர சபைகள், சமூக அமைப்புகள் மற்றும் பல்வேறு சமூக பங்காளர்களுடன் பங்காண்மையை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது.

# SLT–MOBITEL mCash மற்றும் யூனியன் அஷ்யூரன்ஸ் கைகோர்ப்பு




SLT-MOBITEL mCashஇன் mCash , யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சியுடன் கொண்டுள்ள நீண்ட கால பங்காண்மையை மேலும் வலிமைப்படுத்தியுள்ளது.

SLT-MOBITEL mCash வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு ஆயுள் காப்புறுதி தீர்வுகள் தெரிவை அறிமுகம் செய்து இந்த பங்காண்மை மேம்படுத்தலை மேற்கொண்டுள்ளது.

2014ஆம் ஆண்டில் இரு நிறுவனங்களுக்குமிடையே ஏற்படுத்தப்பட்ட நீண்ட கால உறவின் நீடிப்பாக இந்த கைகோர்ப்பு அமைந்துள்ளதுடன், SLT-MOBITEL இன் பரந்த வலையமைப்பினூடாக ஆயுள் காப்புறுதி சந்தாப் பணத்தொகையை திரட்டும் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு இந்த கைகோர்ப்பு பெரிதும் உதவியாக அமைந்திருந்தது.

மொபைல் இணைப்பு மற்றும் ஆயுள் காப்புறுதி ஆகிய பிரிவுகளில் இந்த நம்பிக்கையை வென்ற வர்த்தக நாமங்கள் கொண்டுள்ள உறுதித் தன்மையை மேலும் வெளிப்படுத்தும் வகையில், அண்மையில் இரு நிறுவனங்களும் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருந்தன.

அதன் பிரகாரம் SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு தற்போது முன்னணி ஆயுள் காப்புறுதி தெரிவுகளை இலகுவாக அணுகும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சகாயத்தன்மை வாய்ந்தனவாக அமைந்திருப்பது மாத்திரமன்றி, சிக்கல்களற்ற பதிவு செயன்முறையுடன், mCash இன் துரித கொடுப்பனவு உட்கட்டமைப்பின் வலுவூட்டலையும் கொண்டுள்ளது.

மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம செயற்பாட்டு அதிகாரி சுதர்ஷன கீகனகே கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையின் காப்புறுதித் துறையில் புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக யூனியன் அஷ்யூரன்ஸ் உடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மிகவும் பெருமை கொள்கின்றோம்.



# அழாதே பிறையே....

நீ தேய்வதனாலே
உன்னிலும் குறையென்று
ஊர் வாய்க்கு இரையானாய்
பாரிருள் அகற்றும்...
அற்புத ஒளி ஈந்தும்
நற் சொல்லுரைக்கா
நயவஞ்சக உலகிது
உலகோரை திருப்திப்படுத்த
ஒரு போதும் எண்ணாதே...
உன் ஆயுளும் போதாது
உணர்ந்தால் நயமே
உன் மனத் திருப்திக்கு
வாழ்ந்தாற் போதுமடி
வளர்வதும் தேய்வதும்
வாழ்வின் விதியென்று
மனதால் மகிழ்ந்திரு
துவண்டு போகாதே....
முழு நிலவின் அழகையும்
அரை நிலவின் அழகையும்
இரசித்திடும் உள்ளங்கள்
இருந்து கொண்டு தான்
இருக்கின்றன
பிறையே நீ அழாதே
பிதற்றல்கள் கண்டு...
- குகதா





# தாய்மொழியில் சாதிப்போம்

உயிரணுவாக உயிர் நிறைந்து
உருவாகமெல்ல அசைகையில்
உரமேறும் தாயின் ஆசை மொழி
உலகமே சபித்தாலும் உதிராது தாய்மொழி...

மொழிக்கெல்லாம் தாய் என் தமிழ்மொழி
செம்மொழியில் இது செழித்தமொழி
எம்மொழியும் இதற்கு ஈடாகுமா!
தமிழ்மொழி போல் அமிழ்த மொழி ஏதும்
உண்டோ!

பண் சுமந்துபாடல் பெற்றமொழி
எண் அடங்காத சுவை கொண்ட மொழி
கண் கொள்ளாத காட்சி தந்த மொழி
விண் உறைவோர் விரும்பும் மொழி

உயிரும் மெய்யுமாகி தனித்துவமாய் நிற்கும்
உயிரோடு மெய்யேறி உருவம் தரும்
குறிலோடு நெடிலாகி உவகை பெறும்
சீரோடு அசைவு கொண்டே உலகை வெல்லும்

சங்க இலக்கியத்தில் கருவான மொழி
ஐம்பெரும் காப்பியத்தில் உருவான மொழி
அகத்தியரும் ஔவையும் பேசியமொழி
உலகப் பொது மறை தந்த புகழ் மொழி

ஓரெழுத்தாகி பொருள் தருவாய்
ஈரெழுத்தாகி இமயம் தொடுவாய்
பாரோடு பிறந்த அற்புத மொழியே
ஏழேழு பிறப்பிலும் நீயே என் தாய்மொழியே...

ஈழவள நாட்டின் அரசமொழியே
ஈழத்தவர் வானுயர பறந்தமொழியே
ஈழக்கடல் எங்கும் கலந்த மொழியே
ஆழக்கடலை ஆண்ட தமிழ் மொழியே...

- ஞா.ரேணுகாசன்



# அது ஒரு கனா காலம்

களங்கமும் இல்லை
கனவுகளும் இல்லை
எதிர்பார்ப்பின்
ஏக்கங்களும் இல்லை...

சுகங்கள் புரியாது
சோகங்கள் தெரியாது.
சூழ்ச்சிகள் கிடையாது
ஏய்த்துவாழ
எண்ணங்களும் கிடையாது...

நின்று பார்க்கும் கன்றுகுட்டியின்
அழகியகண்கள்...
வாஞ்சையுடன் வாலாட்டிவரும் நாய்...
மியாவ் என்று மிரட்ட
பார்க்கும் பூனைகள்...
கம்பீரமாக நடந்து
போனபெரியவர்கள்...
காலையில் கரையும் காகம்...
கீச்கீச் குருவிகள்...
மொட்டு விட்டம ல்லிகை...
மலர தொடங்கும் ரோஜா...
ஊஞ்சலாடிய முருங்கைகாய்கள்...
பயமுறுத்திய கம்பளிபூச்சிகள்...

இரவு வாசலில்
அமர்ந்து அப்பா சொன்ன
கற்பனை கதைகள்...
தூங்க வைத்து விட்டு
உறவுகள் சென்றசினிமா...
மாமா வீடுகளில்
ஊர் சுற்றிய நேரங்கள்...
கூட்டாஞ்சோறு செய்து
சாப்பிட்ட நட்புகள்...

இன்னும் எத்தனை எத்தனை...
அத்தனையுமே அழகான கனவுகளாக
கறைபடாத இதயமாக
கள்ளமற்ற உணர்வுகளோடு...
மீண்டும் வருமா
அந்த பிள்ளை பருவம்...?

- றொசில்டா அன்டன்





# என் தாரகை

திருத்தத் திருத்தத்தான்
உறுத்துகின்றது
என் இரு கண்களை
உன் அழகு

திரும்பிப் பார்
தளவாடியில் குறை

இரண்டு கண்ணாடி
வரம் உனக்கு
ஒளிபட்டுத் தெறிக்கும்
தவம்

ஆடைகளை சரி செய்வதை
நிறுத்தும் போது
அனிச்சையாக வரும்
பார்வை கோளாறு
ஆண்களுக்கு
நீதிருத்திக் கொண்டே
இரு
நான் காதலில்
பிறவிக் குருடன்

– இ.ரவிகாந்தன்

புது டெல்லி

# இரு நாட்களுக்கு போராட்டம் நிறுத்தம்; ஒருவர் பலி



வேளாண் விலை பொருட்களின் குறைந்தபட்ச ஆதார விலைக்கு சட்டப்பூர்வ உத்தரவாதம், கடன் தள்ளுபடி, உள்ளிட்ட 13 கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணி செல்லும் போராட்டத்தை கடந்த 13ஆம் திகதி தொடங்கினர்.

பஞ்சாபில் இருந்து புறப்பட்ட விவசாயிகள் பஞ்சாப்-அரியானா இடையே ஷம்பு எல்லையிலும் கனாரி எல்லையிலும் தடுத்து நிறுத்தப்பட்டனர். விவசாயிகள் மீது கண்ணீர் புகை குண்டுகள் வீசப்பட்டன. விவசாயிகளை தடுக்க தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வர விவசாய சங்க நிர்வாகிகளுடன் மத்திய அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. நான்கு முறை நடந்த பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்படவில்லை. அதன்படி, விவசாயிகள் வியாழக்கிழமை(22) போராட்டத்தில் ஈடுபட்ட ஆயத்தமாகினர்.

டெல்லியை முற்றுகையிடும் போராட்டத்தை தொடங்கும் விதமாக ஹரியானா, பஞ்சாப் எல்லையில் ஆயிரக்கணக்கான டிராக்டர்களுடன் பொலிஸாரின் தடுப்புகளை அகற்ற விவசாயிகள் ஜே.சி.பி. இயந்திரங்களுடன் புறப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனால் பொலிஸாருக்கும், விவசாயிகளுக்கும் இடையில் பயங்கர மோதல் நடந்தது. அதில் 3 விவசாயிகள் படுகாயம் அடைந்தனர். படுகாயமுற்ற விவசாயிகள் பாட்டியாலா ராஜிந்திரா மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டனர்.

சிகிச்சை பலனின்றி ஒரு விவசாயி மருத்துவமனையிலேயே உயிரிழந்தார். உயிரிழந்தவர் பஞ்சாப் மாநிலத்தின் பதிண்டா மாவட்டத்தை சேர்ந்த 21 வயதான சுப்கரன் சிங் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டத்தில் கலந்து கொண்ட விவசாயி ஒருவர் உயிரிழந்த நிலையில், 5ஆம் கட்ட பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விவசாய சங்கங்களுக்கு மத்திய வேளாண் அமைச்சர் அர்ஜுன் முண்டா அழைப்பு விடுத்துள்ளார்.

பஞ்சாப்-அரியானா எல்லையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த விவசாயி சுப்கரன் சிங் உயிரிழந்ததை தொடர்ந்து போராட்டம் இரண்டு நாட்களுக்கு நிறுத்தி வைக்கப்படுவதாக விவசாய சங்க தலைவர்கள் அறிவித்துள்ளனர்.

பெங்களூரு

# ரமழான் உணவு விழாவுக்கு எதிர்ப்பு



இந்த ஆண்டு மார்ச் 12ஆம் திகதி ரமழான் நோன்பு காலம் தொடங்குவதால், பெங்களூருவில் உணவுத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், இந்த உணவுத் திருவிழாவுக்கு பிரேசர் டவுன் குடியிருப்போர் நலச் சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்த சங்கத்தின் சார்பில் 3,500 பேர் கையெழுத்திட்டு, புலிகேசிநகர் காங்கிரஸ் எம்.எல்.ஏ ஏ.சி. சீனிவாசாவிடம் மனு அளித் துள்ளனர்.

அவர்கள் தங்கள் மனுவில் கூறியிருப்பதாவது, “ரமழான் உணவுத் திருவிழா காரணமாக பிரேசர் டவுனில் 40 நாட்களுக்கு கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனால் பணிக்குச் செல்வோர் கடும் பாதிப்புக்கு ஆளாகின்றனர். கடந்த ஆண்டு உணவுத் திருவிழாவில் ஒரு கடையில் சிலிண்டர் வெடித்து விபத்து ஏற்பட்டது. இதில் காயம் அடைந்தவர்களை மீட்க நோயாளர் காவு வண்டி (ஆம்புலன்ஸ்) வர முடியாத நிலை ஏற்பட்டது. ரமழான் உணவுத் திருவிழாவினால் குப்பை, புகை, கழிவு நீர்போன்ற சுகாதார கேடுகள் ஏற்படுகின்றன. இங்கு இறைச்சி உணவு வகைகள் தூய்மையற்ற முறையில் சமைக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் அதனை உண்ணும் மக்கள் உடல் நலக்குறைவுக்கு ஆளாகின்றனர். எனவே, ரமழான் உணவுத் திருவிழாவை பிரேசர் டவுனில் நடத்தக்கூடாது” என தெரிவித்துள்ளனர்.

இங்கிலாந்து

# புராதன கோபுரம் ஹோட்டலாக மாறுகிறது




இங்கிலாந்து தலைநகரான லண்டனில் உலக கட்டடக்கலை துறையின் சிறப்புகளை உணர்த்தும் பல கட்டடங்கள் உள்ளன.

அவற்றில் ஒன்று லண்டன் “வெஸ்ட் எண்ட்” பகுதியில் உள்ள 1964இல் உருவாக்கப்பட்ட ‘பிடி டவர்’ (British Telecommunications Tower) எனப்படும் 620 அடி உயர கோபுரம். இந்த கோபுரத்தின் மத்திய பகுதி 581 அடிகள் உயரம் கொண்டது.

பிடி டவரை 1965இல் அப்போதைய பிரதமர் ஹெரால்ட் வில்சன் திறந்து வைத்தார்.

அதன் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள 360 டிகிரி எல்.ஈ.டி. (LED) திரை செய்திகளை ஒளிபரப்புகிறது. இந்த கோபுரத்தை தொடக்கத்தில் தொலைக்காட்சி சிக்னல்கள் அனுப்ப பயன்படுத்தி வந்தனர்.

இந்நிலையில், பிடி டவரின் உரிமையாளராக இருந்த பிடி குழுமம் (BT Group), அதனை எம்சிஆர் ஹோட்டல்கள் (MCR Hotels) குழுமத்திற்கு $347 மில்லியனுக்கு விற்பனை செய்து விட்டதாக அறிவித்துள்ளது.

மொபைல் போன்கள் தொழில்நுட்பம் பரவலான பிறகு தகவல் தொடர்பில் இந்த கோபுரத்தின் பயன்பாடு குறைய தொடங்கியதால் இதில் பொருத்தப்பட்டிருந்த நுண்ணலை ஏரியல்கள் நீக்கப்பட்டன.

நோர்வே

# எலானுக்கு நோபல் வழங்க பரிந்துரை



டெஸ்லா (Tesla), ஸ்பேஸ் எக்ஸ் (SpaceX) நிறுவனங்களின் தலைவரும் தொழிலதிபருமான எலான் மஸ்க் சமூக வலைத்தளமான டுவிட்டரை 2022இல் வாங்கி எக்ஸ் என பெயர்மாற்றம் செய்தார்.

சுதந்திர பேச்சை வெளிப்படுத்த இதனை செய்ததாக அவர் குறிப்பிட்டார். மேலும், ரஷ்யா- உக்ரேன் போரில் உக்ரேன் இராணுவத்துக்கு செயற்கைக்கோள்வழி தொடர்பினை அவரது நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்தது.

இவற்றுக்காக எலான் பெயரை நோபல் பரிசுக்குப் பரிந்துரைக்கலாம் என மரியஸ் நில்சன் தெரிவித்ததாக பொலிட்கோ செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முற்போக்கு கட்சியை சேர்ந்த மரியஸ் நில்சன் , ரஷ்யா - உக்ரேன் போரின் போது செயற்கைக்கோள் தகவல் தொடர்புகளை வழங்கியது, சுதந்திரமான பேச்சு மற்றும் திறந்த உரையாடலுக்கான ஆதரவுக்காக 2024ஆம் ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை எலான் மஸ்க்கிற்கு வழங்க வேண்டும் என முன்மொழிந்துள்ளார்.



இன்று ஆரம்பிக்கிறது நான்காவது டெஸ்ட்:

# தோல்வியிலிருந்து மீளுமா இங்கிலாந்து?

இந்திய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான நான்காவது டெஸ்ட் போட்டியானது ராஞ்சியில் இன்று வெள்ளிக்கிழமை (23) காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

5 போட்டிகள் கொண்ட இத்தொடரின் கடந்த போட்டியில் படுதோல்வியடைந்துள்ள இங்கிலாந்து, இப்போட்டியில் இங்கிலாந்துக்கு சவாலளிப்பதற்கு துடுப்பாட்டத்தில் பாரியளவு முன்னேற்றத்தைக் காண்பிக்க வேண்டியுள்ளதுடன், பந்துவீச்சிலும் பாரியளவு ஒழுக்கம் தேவைப்படுகிறது.

குறிப்பாக ஜோ றூட், ஜொனி பெயார்ஸ்டோவிலிருந்து மேம்பட்ட பெறுபேறுகள் எதிர்பார்க்கப்படுவதோடு, டொம் ஹாட்லி போன்றோர் ஓட்டங்கள் இலகுவாகப் பெறுவதை தடுக்க வேண்டும்.

கடந்த போட்டியில் விளையாடிய றெஹான் அஹ்மட், மார்க் வூட்டை ஷொய்ப் பஷிர், ஒலி றொபின்ஸன் ஆகியோர் பிரதியிட்டுள்ளனர்.

இந்திய அணியில் ஓய்வளிக்கப்பட்டுள்ள ஜஸ்பிரிட் பும்ராவை முகேஷ் குமார் பிரதியிடுவாரெனத் தெரிகிறது.




# எல்படையில் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

பொகவந்தலாவ, எல்பட தமிழ் வித்தியாலய பழைய மாணவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் அணிக்கு, ஒன்பது பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி, எல்பட மேற்பிரிவு எட்லஸ் விளையாட்டு மைதானத்தில், வெள்ளிக்கிழமையும் (23) சனிக்கிழமையும் (24) நடைபெறும். இதில், பிரதம அதிதியாக, எல்பட தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் தியாகசந்திரன் கலந்துகொள்வார்.

இறுதிப் போட்டியில் வெற்றிப்பெறும் அணிகளுக்கு பெறுமதிமிக்க கேடயங்கள் வழங்கப்பட்டு, பதக்கங்கள் அணிவிக்கப்படும். அத்துடன், சான்றிதழ்களும் வழங்கப்படும்.



போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னர், எல்பட கீழ் பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் விசேட வழிபாடுகள் வெள்ளிக்கிழமை (23) காலை 7 மணிக்கு இடம்பெற்று. தேசிய கொடி, பாடசாலை, பழைய மாணவர் சங்க, மற்றும் எட்லஸ் விளையாட்டு கழக கொடிகளை ஏந்தியவாறு, கேடயங்களுடன் அங்கிருந்து மைதானம் வரைக்கும் ஊர்வலமும் இடம்பெறும்.

மூன்றாவது போட்டியில்

# இலங்கையை வென்ற ஆப்கானிஸ்தான்

இலங்கைக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், தம்புள்ளையில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 209/5 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 70 (43), ஹஸரத்துல்லா ஸஸாய் 45 (22), அஸ்மதுல்லாஹ் ஓமர்ஸாய் 31 (23), மொஹமட் இஷக் ஆ.இ 16 (08) ஓட்டங்கள்)

இலங்கை: 206/6 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: கமிந்து மெண்டிஸ் ஆ.இ 65 (39), பதும் நிஸங்க 60 (30), சதீர சமரவிக்கிரம 23 (12) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ்

தொடரின் நாயகன்: வனிடு ஹசரங்க






சம்பியன்ஸ் லீக்:

# போர்ட்டோவிடம் தோற்ற ஆர்சனல்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில், போர்த்துக்கல் கழகமான எஃப்.சி போர்ட்டோவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் தோற்றது.

இதேவேளை, இத்தாலிய சீரி ஏ கழகமான நாப்போலியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா சமப்படுத்தியது. பார்சிலோனா சார்பாகப் பெறப்பட்ட கோலை றொபேர்ட் லெவன்டோஸ்கி பெற்றதோடு, நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை விக்டர் ஒஸிம்ஹென் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 23, பெப்ரவரி 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.